பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 57** **நாள்: 16.03.2019**

**மாதவரம் (மந்தவெளி – தெலுங்கு காலணி) எரிவாயு மயானபூமியில் பராமரிப்பு பணிகள் நடைபெறுவதால், பொதுமக்கள் புழல், கொடுங்கையூர் மற்றும் திரு.வி.க.நகர் எரிவாயு மயானபூமிகளை பயன்படுத்திக் கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி அறிவிப்பு**

= = = =

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை, மாதவரம் மண்டலம், கோட்டம்–27ல் அமைந்துள்ள மந்தவெளி–தெலுங்கு காலணி தகன எரியூட்டகத்தில் உள்ள தகனமேடை பழுது ஏற்பட்டுள்ளதால், அதனை சீர்செய்யும் பொருட்டு 18.03.2019 முதல் 31.03.2019 வரை தற்காலிகமாக மேற்கண்ட மயானபூமி இயங்காது.

மேலும், பராமரிப்பு பணிகள் நடைபெறும் நாட்களில் பொதுமக்கள் அருகாமையிலுள்ள புழல் ஜி.என்.டி சாலை மயான பூமி, கொடுங்கையூர், சித்தரம் நகர் இந்து மயான பூமி மற்றும் திரு.வி.க.நகர், பூமி பல்லவன் சாலை தாங்கல் இந்து எரிவாயு மயானபூமிகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**